செ.வெ.எண் : 30/ஜுலை நாள் : 27.07.2020

## இராமநாதபுரம் மாவட்டம்

## கல்பனா சாவ்லா விருதுக்கு தகுதியான நபர்கள் விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

2020-ஆம் ஆண்டின் சுதந்திர தினத்தன்று கல்பனா சாவ்லா விருது, வீரதீரச் செயல் புரிந்த பெண்களை கௌரவிக்கும் விதமாக வழங்கப்படுகிறது. ஆண்களுக்கு நிகரான தைரியமான, வீரதீரச் செயல் புரிந்தும் பெண்களின் நலனுக்காகவும், மேம்பாட்டிற்காகவும் துணிச்சலான சவால் நிறைந்த செயல்களை செய்த பெண்கள் இருப்பின் அவர்களிடமிருந்து கருத்துருக்கள் ஜுலை 30 ஆம் தேதிக்குள் வரவேற்கப்படுகின்றன. மேலும் விருது வேண்டி விண்ணப்பிப்பவர்கள் தமிழகத்தில் பிறந்தவராக இருக்க வேண்டும். தாங்கள் செய்த வீரதீரச் செயல்கள் குறித்த உரிய விபரங்கள், அதற்கு அத்தாட்சியாக நிழற்படங்கள், விருது ஏதேனும் பெற்றிருந்தால் அதுபற்றிய விபரங்களும் தர வேண்டும். பிறந்த தேதி, கல்வித்தகுதி போன்ற முழு முகவரி மற்றும் தொலைபேசி எண் உள்ளிட்ட விபரங்களுடன் மாவட்ட ஆட்சியரகத்தில் செயல்படும் மாவட்ட சமூகநல அலுவலகத்தில் ஜுலை 30 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**